Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 28-12-1946 மார்கழி 13உ { மலர் 12

# தத்துவ விளக்கம்

## சேலம் காலேஜில் பெரியார் பேச்சு

(சென்றவாரத் தொடர்ச்சி)

6-வது

உயிர்—நான்

"அதாவது, உயிர் என்பது பொருள் தன்மை அற்றது. பொருள் தன்மை அற்றது என்றால் இயக்கும் தன்மை உடையதாகும். இயக்கும் தன்மை உடையது என்றால் இதற்கு உதாரணமாக வேலைசெய்து கொண்டிருக்கும் இயந்திரத்தை அல்லது அது இயங்கிக்கொண்டிருக்கும் தன்மையைச் சொல்லலாம். எதுபோல் என்றால் ஒரு கெடியாரம் ஓடிக்கொண்டு இருப்பதுபோலவும், ஒரு இஞ்சின் ஓடிக்கொண்டு இருப்பது போலவும், ஒரு இஞ்சின் இயங்கிக்கொண்டிருக்கும்போது அதன் அசைவின் காரணமாக அதனுடன் இணைக்கப்பட்ட மற்றும் பல யந்திர சாதனங்கள் வேலை செய்வதுபோலவும் இருக்கிறதுபோன்றே உயிர் என்பதும் ஒரு இயக்கும் தன்மையாகும். அந்த இயக்கும் தன்மையான உயிர் என்பதற்குக் காரணமாய் இருப்பது சரீரக்கூட்டு அமைப்பும், சரீரத்துக்கு அளித்துவரும் ஆகாராதி சாதனங்களுமாகும். அமைப்பு எப்படிப்பட்டதாய் இருந்தாலும், அதற்குத் தேவையான ஆகாரம், உணவு இல்லாவிட்டால் சரியாய் இயங்காது என்றே சொல்லலாம். ஆகவே உயிர் என்பது சரீரகூட்டு அமைப்பாலும் அதற்கு அளிக்கப்படும் உணவாலும் இயங்கிக் கொண்டு இருக்கும் தன்மையே யாகும்.

அமைப்பில் கேடு உண்டாகிவிட்டாலும், உணவு இல்லாவிட்டாலும் உயிர் நின்றுவிடும், அல்லது உயிர் போய்விடும், அதாவது இயங்குதல்— அசைதல், கருவி கரணாதிகள் வேலை செய்தல் ஆகியவை நின்றுவிடும். உயிர் உள்ளவரை மனிதனாகக் கருதப்பட்ட ஒரு பிராணியானவன் உயிர் போய்விட்டவுடன் அதாவது அசையும் தன்மை நின்றுபோன உடன் "செத்தவனாக, செத்தப் பிணமாக" ஆகிவிடுகிறான். உயிர் போய்விட்டது என்றால் என்ன? என்று பார்ப்போமானால் ஒரு சரீரமானது காற்றை இழுத்து காற்றை வெளியே விடும்படியான சுவாசிக்கும் தன்மையை இழந்துவிட்டால், "சுவாசம் நின்றுவிட்டால்" உயிர் போய்விட்டது என்றும், "செத்துப்போய்விட்டான்" என்றும் சொல்லப்பட்டு விடுகிறது.

இப்படிப்பட்ட உயிர் உள்ள மனிதன் என்பவன் பேசும் சக்தி உடையவனாக இருப்பதனால் அவன் தன்னை அறிவிப்பதற்கும் "நான்" "என்னுடையது" என்பதான வார்த்தைகளால் தன் உணர்ச்சியைக் காட்டுகிறான். மற்ற ஜீவன்களுக்கும் தன் சுய உணர்ச்சி இருக்கிறது என்றாலும் அவை அதைப் பேச்சின் மூலம் காட்ட முடிவதில்லை. ஆனால் செய்கையின் மூலம் காட்டுகின்றன.

உதாரணமாக,

ஒரு நாயை "ரோஸ்" என்று பெயர்வைத்து வளர்த்தோமானால் "ரோசு" என்று அழைத்தவுடன் ஓடி வருகிறது. மற்றும் சில நாய்கள் சொன்னபடி நடக்கின்றன. இந்த அழைத்தல், கட்டளைகள் தனக்குத்தான் தன் எஜமானால் அல்லது மற்றவனால் சொல்லப்பட்டவை என்று உணர்ந்து அந்தப்படி நடக்கின்றது. இதுபோல் அநேக உயிர்களுக்கு நான் என்னுடையது, தன் குட்டி, தன் குஞ்சு, தன் வீடு, தன் கூண்டு என்பதுபோன்ற தன் உணர்ச்சி இருந்து வருகின்றது. இந்தத் தன் உணர்ச்சியானது அதற்கு உயிர் இருக்கிறபடியால் ஏற்பட்டது என்பதல்லாமல் அது (நான், எனது) என்பது ஒரு தனிப்பொருள் தன்மையால் அல்ல என்பதை உணர்க.

உதாரணமாக ஒரு மனிதனைப் பார்த்து "நீ அடிக்கடி நான் நான் என்று சொல்லுகிறாயே, அந்த நான் என்பது

என்ன?" "என்னுடைய உயிர் என்கிறாயே அந்த உயிர் என்பது என்ன?" என்று கேட்டால் அநேக மனித ஜீவன்களால் அதை விளக்கவே முடியாது என்பது மாத்திரமல்லாமல் தனக்குள் விளக்கிக்கொண்டவனாகவும் இருக்கமாட்டான். ஏன்? அதில் ஏதாவது இருந்தால் தானே அதை விளக்கிக் கொள்ளமுடியும்? தானாக உண்டாகும் ஒரு உணர்ச்சியை ஒரு பொருள் என்று கருதினால் அந்தப் பொருளை எப்படிக் காட்சியாலோ, கருத்தாலோ அறியமுடியும்? அந்த உணர்ச்சி தானாக எப்படி உண்டாகின்றது? என்றால் பொருள்களின் தாதுக்களுக்கு ஒன்றோடு ஒன்று சேர்ந்தால் இன்ன மாதிரியான தன்மை செயல், மாறுதல் ஏற்படும் என்கின்ற தாதுக்கூட்டுத் தன்மைகள் இயற்கையாகவே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக மஞ்சளுடன் சுண்ணாம்பைச் சேர்த்தால் தானாக சேரசேரிட்டால் சிவக்கின்றது, நீலமும் மஞ்சளும் சேர்ந்தால் பச்சை ஆகின்றது, சில காற்று ஒன்று சேர்ந்தால் தண்ணீர் ஆகின்றது, சில வஸ்து ஒன்றுசேர்ந்தால் விஷமாகின்றது, சில வஸ்துகள் சேர்ந்தால் பொங்குகிறது, தளபுள தளபுள என்று சத்தமாகிறது, சூடு ஆனால் சில வஸ்து ஆவி ரூபமடைந்து மறைந்து போகிறது, சில ஆவி ரூபமடைந்து கடினவஸ்து ஆகிறது. இப்படிப் போல் சில பொருள் கூட்டினால், தானாகச் சில பொருள் கூட்டுசேர்ந்தால் தானாக சில தன்மைகள் ஏற்படுகின்றன. இந்தத் தானாக ஏற்படும் தன்மைகளுக்குத்தான் நாம் தனிப்பெயர்கள் வைத்துத் தனித்தனி வஸ்துகள் என்றே கருதுகிறோம்.

எப்படி என்றால் வாத்தியப் பெட்டி (மியூசிகல் பாக்ஸ்) என்று ஒரு பெட்டி இருக்கிறது அதற்குச் சாவி கொடுத்து வைத்துவிட்டால் அது இராகம் தாளம் ஆகியவைகளுக்கு ஏற்ற வண்ணம் பாட்டு வாண மெட்டுகளை ஒலிக்கச் செய்கிறது. ஒலி கேட்ட உடனே அதை நாம் இன்ன இராகம், இன்ன தாளம், இன்ன பாட்டின் மெட்டு என்று சொல்லலாம். இதன் காரணம் என்ன? வெறும் சப்தமாக இருந்தால் இயற்கை ஒலி என்று சொல்லலாம். ஆனால் தாளம் இராகம் சரியாய், ஒரு பல்லவி, ஒரு அனுபல்லவி, 2, 3 சரணங்கள் உடன் குறிப்பிட்ட பாட்டு என்று சொல்லும்படியாக அந்தப் பெட்டி பாடுகிறது என்றால் என்ன அருத்தம்? அதன் அமைப்பின் காரணமாய் ஏற்பட்ட ஒலியானது நமக்கு அந்தப்படி தெரிகிறது என்பதுதானே ஒழிய அதற்குத் தன் உணர்வோ உயிரோ ஏதாவது இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

அதுபோலவே மனித சரீர அமைப்பு—கூட்டு, "ஜீவன்" என்கின்ற இயக்க சக்தியால் இயக்கப்படும்போது பேசுதல், நினைத்தல், பார்த்தல், கேட்டல், கோபித்தல், சிரித்தல், அழுதல் பாடுதல், அடித்தல், அதிசயம் கண்டுபிடித்தல், ஆகாயக் கப்பலில் பார்த்தல் முதலிய காரியங்கள் செய்யப்படுகின்றன. இதற்குத் தனியாக ஒரு ஜீவன் அல்லது உயிர் என்கின்றதான வஸ்து தேவை இல்லை.

இதைச் சரியாய் உணர்ந்தால் ஆத்மா என்றோ உயிர் என்றோ ஒரு தனிப் பொருள் இருப்பதாக யாரும் கருத முடியாது. கருதுவது பொய் உணர்ச்சியேயாகும் என்றும், ஆராய்ச்சி அற்ற குருட்டு நம்பிக்கை என்

(தொடர்ச்சி 7-பக்கம்)


# 'திராவிடமணி'

## 8-வது ஆண்டு மலர்

5-1-47உ வெளிவருகிறது.

★

கவியரசர் பாரதிதாசன், தளபதி அண்ணாதுரை, கைவல்யம், முதலியோர் எழுத்துச் சிற்பங்களுடன், பிரதி பக்கங்களிலும் சித்திர (கார்ட்டூன்) படங்கள் மிளிர 24பக்கங்களில் வெளிவருகிறது. நான்குவார வெளியீட்டை நிறுத்தி சொற்ப பிரதிகளே இந்த ஆண்டு அச்சிடுகிறோம்.

தேவையானவர்கள் 25% கமிஷன் நீக்கி முன் பணத்துடன் ஆர்டர் செய்ய கோருகிறோம்.

தனிப்பிரதி விலை 6 அணா.

மானேஜர், "திராவிடமணி"
தெப்பக்குளம், திருச்சி

N. B:- "திராவிடமணி" ஏஜண்டுகளில் பாக்கியுள்ளவர்களுக்கு ஆண்டுமலர் அனுப்புவதற்கில்லையாதலால், உடனே பாக்கியை அனுப்பி ஆர்டர் எழுதவேண்டுகிறோம்.


ரோஜா முத்தையா

### வாணியம்பாடியில்
# பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில்
## ஜின்னா பிறந்தநாள் கொண்டாட்டம்

25-12-46ந்தேதி மாலை 4மணிக்கு வாணியம்பாடி இஸ்ப்ரேட் ஜின்னா மைதானத்தில் முஸ்லிம்லீக் தலைவர் முகமதலி ஜின்னா அவர்கள் பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்தது. கூட்டத்திற்கு இந்து முஸ்லிம்கள் சுமார் 6000 பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள். 4மணிக்கு முஸ்லிம் சொசைட்டியில் இருந்து பெரியதொரு ஊர்வலம் நகரின் முக்கிய பாகம் வழியாக நடந்து $5\frac{1}{2}$ மணிக்கு ஜின்னா நகரில் வந்து சேர்ந்தது. உடனே பெரியார் ஈ.வெ. ராமசாமியைத் தலைமை வகிக்க வாணியம்பாடி லீக் தலைவர் பிரேரேபித்தார். ஜனாப் முகம்மது அன்வர் சாயபு எம். எல். ஏ. அவர்கள் ஆதரித்தார். பெரியார் தலைமை வகித்ததும் கிராஅத் ஓதப்பட்டது.

பின் ஜனாப்கள் முகமத் அன்வர் சாயபு எம். ஏ., எம் எல். ஏ., அவர்கள் உருதுவில் பேசினார். பிறகு சென்னை மஹதி அலி சாயபு பி. ஏ., பி. எல்., ஆங்கிலத்தில் பேசினார். பிறகு முகத்தார் பாஷா பீகம் என்ற பெண் உருதுவில் பேசினார். அதன் பிறகு மௌலானா சுல்தான் மொய்தீன் சாயபு பஹமனி உருதுவில் பேசினார்.

கடைசியாகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் $1\frac{1}{2}$ மணிநேரம் தமிழில் பேசினார்.

பேசியவர்கள் பெரிதும் ஜின்னா சாயபுவின் பெருமையைப்பற்றியும் அவரது திறமையின் தலைமையைப் பற்றியும் தற்கால அரசியல் நிலைமையில் இந்துமுஸ்லிம் பிரச்சினையைப் பற்றியும் பேசினார்கள்.

முஸ்லிம் தலைவர்களுக்கும் பெரியாருக்கும் லீக் தலைவர் வீட்டில் விருந்து நடந்தது. வெளியூர்களில் இருந்துவந்த இந்து தோழர்களுக்குக் கவுன்சிலர் கோவிந்தராஜு அவர்கள் வீட்டில் விருந்து நடந்தது.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 25ந் தேதி இரவு 12மணிக்குமேல் தர்மபுரி செல்வதற்காகத் திருப்பத்தூருக்குப் பஸ்ஸில் புறப்பட்டுச் சென்றார்.

26-12-46 காலை பெரியார் திருப்பத்தூரிலிருந்து டஸ்ஸில் தர்மபுரி வந்து சேர்ந்தார். அங்கு தோழர் பொன்னுச்சாமி அவர்கள் வீட்டில் பகல் விருந்து நடந்தது.

மாலை $5\frac{1}{2}$ மணிக்குப் பஞ்சாயத்துப் போர்டார் மைதானத்தில் பெண்ணாகரம் தோழர் நஞ்சய்யா அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் துவக்கப்பட்டது. கூட்டத்திற்குச் சுமார் 3000 மக்கள் வந்திருந்தனர். தோழர்கள் முருகேசன், நடேசன் ஆகியவர்கள் பாடினார்கள். பின் முஸ்லிம் நவஜவான் சங்கத்தாரால் பெரியாருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. உள்ளூர் பனகால் சிற்றுண்டிச்சாலை சொந்தக்காரரால் ஒரு வரவேற்பு உரை வழங்கப்பட்டு 25 ரூபாய் நன்கொடை யளிக்கப்பட்டது. பிறகு தருமபுரி தாலுக்கா சார்பாக 675 ரூபாய் திராவிட கழகத்திற்கு அளிக்கப்பட்டதில் முன் சேலத்தில் கொடுத்த 500 ரூபாய் தவிர இன்று 162 ரூபாய் பெரியார் வசம் கொடுக்கப்பட்டது.

பிறகு பெரியார் $2\frac{1}{2}$ மணிநேரம் திராவிட கழகக் கொள்கைகளையும் திட்டங்களையும் அவை இதுவரை நடத்தப்பட்டு வந்திருப்பதையும் காங்கரசுக்கும் திராவிட கழகத்திற்கும் உள்ள வித்தியாசம் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் திராவிடர்கள் கடமைப் பற்றியும் விளக்கமாகப் பேசினார். இதன் பயனாகத் தர்மபுரி இளைஞர் உள்ளத்தில் பெரியதொரு மறுமலர்ச்சியும் புதியதொரு கிளர்ச்சியும் ஏற்பட்டது என்று சொல்லலாம். கூட்டம் நடந்தபிறகு உள்ளூர் இளைஞர்களும் வெளியூரிலிருந்து வந்த இளைஞர்களும் தங்களுக்கு உள்ள சந்தேகங்கள் அபிப்பிராய பேதங்கள் ஆகியவைகள்பற்றி இரவு 12மணி வரை பெரியாரிடம் பேசித் தெளிவு பெற்றார்கள்.

மறுநாள் காலை 6மணிக்குப் பெரியார், மணியம்மை, காளியப்பன் ஆகியவர்கள் ஈரோட்டிற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

## சாக்கோட்டையில் பெரியார்

பெரியார் ஈ. வெ. ரா. கும்பகோணத்தையடுத்த சாக்கோட்டையில் நடைபெறும் ஆரம்பப் பாடசாலையைப் பார்வையிட தோழர் எஸ். ஆர். சாமியின் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தோழர் கே. கே. நீலமேகம், தோழியர் கே. ஏ. மணியம்மையார் ஆகியோருடன் வந்தார்கள். பெரியார் சிறிது நேரம் பாடசாலையைப்பற்றிப் பேசக் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்கிணங்க பெரியார் தோழர் எஸ். ஆர். சாமி அவர்களின் சேவையைப் பாராட்டியும் பாடசாலையில் நடைபெறும் நடவடிக்கைகள், பாடங்கள் ஆகியவைகள் திராவிட சமுதாய முன்னேற்றத்திற்கும், மாணவர்கள் பிற்கால வாழ்க்கையில் பகுத்தறிவுடைய மக்களாக வாழ்வதற்கும் துணைசெய்வதாக இருக்க வேண்டுமென்றும், ஆசிரியர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றியும் சிறிதுநேரம் பேசி பின்னர் பாடசாலையைப் பெரிதாக ஆக்கவேண்டுமென்று குறிப்பிட்டார். அதற்காகப் பெரியார் 50ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தார். பின்னர் ஒவ்வோர் வகுப்பையும் பார்வையிட்டார்.

பிறகு சுயமரியாதைச் சமதர்ம சங்கத் தலைவர் தோழர் கே. கணபதி அவர்களின் 3-மாதக் குழந்தைக்கு "திராவிட அரசு" எனப் பெயரிட்டார். தோழர் கே. கணபதி அவர்கள் தேநீர் விருந்துவைத்தார். குழந்தைக்குப் பெயரிட்டதின் நினைவாக 'விடுதலை' 'குடியரசு' வளர்ச்சிக்குத் தோழர் கணபதி ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளித்தார்.

## நன்கொடை

அன்புடையீர்!

நன்னிமங்கலத்தில் ஏழை சிறுவர்களால் திராவிடர் கழகம் நடத்தப்பட்டு வருகிறது. கழகத்திற்குச் சொந்தமாக மனை வாங்கிக் கட்டிடம் கட்டுவதற்குத் தங்களால் இயன்ற பொருள் உதவி கொடுத்து ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

என். எம். நாகராசன்,

திராவிடர் கழகம், நன்னிமங்கலம்,

லால்குடி போஸ்டு.

குடி அரசு

1946-ஆம் டிசம்பர் 28உ

# அங்கேயும் நம் கதை தான்!

சென்னை சுதேசிப் பொருட்காட்சித் திறப்புவிழாவில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றி கூறிய தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், "வடநாட்டைப் போல் நம் தென்னாட்டில் தொழில் அத்துணை அபிவிருத்தியடையவில்லை" யென்றும், "வடநாட்டைப் போலவும் இதர நாடுகளைப் போலவும் நம் தென்னாட்டிலும் தொழிற்சாலைகளும் பொருட்சாலைகளும் ஏற்பட்டால்தான் நம் மக்களுக்குச் சுபிட்சம் ஏற்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டமும் தீரும்" என்றும் பேசியிருக்கிறார். இது 24-12-46 (சென்னை) "சுதேசமித்திரன்" பத்திரிகையிலும் (பக்கம் 3, பத்தி 4) இதர தேசியத் தாள்களிலும் வெளியாகியிருக்கிறது.

இதே வார்த்தைகளைப் பெரியார் அவர்கள் கூறியிருந்தால், "பார்! பார்! தாய்நாட்டைத் துண்டு போட்டுப் பேசுகிறான்! திராவிடநாட்டுப் பிரச்னையை நுழைக்கிறான் பார்! பாரதமாதாவை வெட்டக்கூடிய உணர்ச்சியைக் கிளப்புகிறான், பார்!" என்றிருப்பார்கள், தேசபக்தர்கள்!

மேற்கூறிய வார்த்தைகளை வெளியிட்டவர் காங்கரஸ் அனுதாபி. அங்கத்தினராகவும் இருக்கலாம். அல்லது ராஜாஜியாரைப் போல அங்கத்தினரல்லாத அனுதாபித் தலைவராகவும் இருக்கலாம்! அது மட்டுமல்ல! ஆரியன் பார்ப்பனர்! அவரே சொல்கிறார், வடநாட்டைப்போல் இந்நாடு தொழில் வளர்ச்சியடையவில்லையென்று! "வடநாடு பாரதமாதாவின் திருமுகம்தானே, திருமுகத்தில் இரத்த ஓட்டம் இருந்தால் போதும், கால்களிரண்டும் சூம்பிப்போய்விட்டாலும் பாதகமில்லை" என்று கூறவில்லை இவர்! "இந்தியா ஒரே நாடு; 40 கோடி மக்களைக் கொண்ட புண்ய பூமி! இதில் வடபகுதி, தென்பகுதி என்று பிரிப்பது மகாபாதகம்!" என்று கருதவில்லை கிருஷ்ணமாச்சாரியார்! "அய்யருக்குத் தானம் கொடுத்துவிட்டால், அய்யர் அல்லாதவரின் வயிறு நிரம்பிவிடும்" என்ற தத்துவத்தைக்கொண்ட இனத்தில் பிறந்த இவரே, வடநாட்டான் வயிறு நிறைந்தாலே போதாது; தென்னாட்டான் வயிறும் நிறையவேண்டும், என்கிறார்! நமது இனத்தைச் சேர்ந்த (பிறவியால் மட்டும்) ராமலிங்கங்களும், கல்யாணசுந்தரங்களும் திராவிடநாட்டுக் கிளர்ச்சியை எதிர்க்கத் துணிந்துள்ள வேளையில், ஓர் ஆரியர் இவ்வாறு பேசுவது சிலருக்கு அதிசயமாயிருக்கலாம். ஆனால் நாம் அதிசயப்படவில்லை, பெரியார் ஊற்றினால் "தண்ணீர்"! அதையே ஆச்சாரியார் ஊற்றினால் "தீர்த்தம்"!

போகட்டும்! பிரிவினையை மூட்டிக்கொண்டிருக்கும் காங்கரஸ் இயக்கத்தின் சம்பந்தமான பொருட்காட்சி விழாவிற்குள்ளாகவே, வடநாடு—தென்நாடு என்று ஒருவர் பிரித்துப் பேசினார் என்பது கவனிக்கத்தக்கது. எத்தனை விபீஷணர்கள் எதிர்த்தாலும் சரி, இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்டாதவரையில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டே தீரும்!

தோழர் கிருஷ்ணமாச்சாரியார் பிரச்னையை மட்டும் சுட்டிக்காட்டினாரே தவிர "ஏன்?" என்ற கேள்வியைப் போடவில்லை. "என்ன செய்யவேண்டும்" என்ற மற்றொரு கேள்வியையும் போட்டிருக்க வேண்டும்; இந்த இரண்டு கேள்விகளையும் போட்டிருந்தால், அவைகளுக்குப் பதில் கூறுவதற்கு நம் பத்திரிகைகளைப் புரட்டித்தான் தீருவார் தோழர் கிருஷ்ணமாச்சாரியார்.

"அத்துணை அபிவிருத்தியடையவில்லை" உண்மைதான்! ஏன்? "பிரிட்டிஷ் தொழில்களைப்போல இந்தியத் தொழில்கள் அத்துணை அபிவிருத்தியடையவில்லை" என்று நாம் கூறுகிறோம். உடனே, ஏன்? என்ற கேள்வியும் எழுகிறது. "பிரிட்டிஷ்காரன் 150 ஆண்டுகளாக ஆட்சி செய்ததன் பயனாக நம் தொழில்களை நசிக்கச்செய்து, இந்தியரின் பணத்தைச் சுரண்டிக்கொண்டு போய்விட்டான்" என்ற பதில் கிடைக்கிறது. பிறகு அடுத்த கேள்வியும் தானாகவே எழுகின்றது. 'இனி என்ன செய்யவேண்டும்?' அவனுடைய தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டும்; அதாவது வெள்ளையனை வெளியேற்றவேண்டும்; அவன் ஆதிக்கத்தை முறிக்க வேண்டும். இதுதான் சரியான பதில். இதே கேள்விகளும் வடநாட்டுப் பிரச்னையிலும் எழுகின்றனவே! "ஏன் தென்நாடு அபிவிருத்தியடையவில்லை?" "இந்த 60 ஆண்டுகளாகவே (காங்கரஸ் ஏற்பட்டது முதல்) வடநாட்டான் காங்கரஸ் இயக்கத்தின் பயனாக நம் தென்னாட்டுத் தொழில்களை நசிக்கச்செய்து, தென் இந்தியரின் (திராவிடரின்) பணத்தைச் சுரண்டிக்கொண்டு போய்விட்டான்" என்ற பதிலைத் தவிர தோழர் கிருஷ்ணமாச்சாரியாரோ, அல்லது வேறு எந்த நிபுணரோ, வேறு என்ன பதிலைக் கூற

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

29-12-46 பெங்களூர் (பெங்களூரிலேயே இரண்டு மூன்று நாள்கள் தங்குவார்]
4-1-47 விழுப்புரம்
5— நாகூர்
6— பிரயாணம்
7— ஈரோடு
8— வெள்ளக்கோவில்
பிறகு சென்னை செல்லக்கூடும்.

முடியும்? அறைகூவிக் கேட்கிறோம்.

எனவே, அடுத்த கேள்வியும் தானாகவேஎழுகின்றது. "இனி என்ன செய்யவேண்டும்?" வடநாட்டான் தொடர்பை அடியோடு அறுத்துக்கொள்ள வேண்டும்; அதாவது அவனை வெளிபேற்றவேண்டும்; அவன் ஆதிக்கத்தை நொறுக்கவேண்டும்; தென்நாடு (திராவிடம்) தனி ஆட்சி பெறவேண்டும்.

இதைத்தவிர வேறு என்ன பதில் கூறமுடியும்? "இதற்காக நாட்டைத் துண்டுபோடுவது கூடாது! ஐக்கியமாகவே இருந்து சரிப்படுத்திக்கொள்ளலாம்" என்று தேசபக்தர்கள் கூறுவார்களேயானால், அதைவிட அறிவு சூன்யமான பதில் வேறெதுவுமில்லை. பிரிட்டனுடன் ஐக்கியமாகவே இருந்து, நம் தொழில்களை வளர்த்துக் கொள்ளலாம் என்று கூறுவது எவ்வளவு மடத்தனமோ அதைவிடப் பன்மடங்கு மடத்தனம், வடநாட்டானுடன் ஐக்கியப்பட்டிருக்கலாம், என்று கூறுவது!

இதைத்தான் திராவிடர் கழகம் கூறுகிறது! இதுதான் திராவிட நாட்டுப் பிரச்சினையின் அடிப்படை! இதைத்தான் எதிர்க்கிறார்கள், விஷயந்தெரியாத அப்பாவிகளும், விஷமப் புத்தி படைத்த ஆரிய வாக்கதாரும்!

## திராவிடர் கழகத் தோழர்களுக்கு

### முக்கிய அறிவிப்பு

திராவிடர்கழக நிதி வசூல் இன்னும் பூர்த்தியாகாமலிருக்கிறது. நிதி வசூல் ஆரம்பமானதிலிருந்தே நம் தோழர்கள் எங்கும் மாநாடு முதலியன நடத்துவது கூடாது என்றும் அதனால் நிதிவசூல் பாதிக்கப்படுகிறது என்றும், பல முறை தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி வசூல் இன்னும் பெரும் பகுதி முடியாமலிருப்பதினால் நம் இயக்கத்தின் பேரால் இனி யாரும் எந்தவிதமான மாநாடும் எந்தப் பெயரிலும் நடத்தக்கூடாது, நிதி வசூல் முடியும் வரை யாரும் எக்காரியத்திற்கும் பணம் திரட்டி மாநாடு முதலியன நடத்தக்கூடாது. மீறி நடத்தும் இயக்கத்தோழர்கட்குத் திராவிடர் கழகத்தார் ஒருவரும் பணவுதவியோ, ஒத்துழைப்போ செய்யக்கூடாது. தலைவர் அறிக்கை என்று வெளிவருகிறதோ அன்றுதான் மாநாடுகள் சம்பந்தமான முயற்சிகள் செய்யவேண்டும்.

மாநாடுகள் நடத்த எத்தனிப்பது என்பது நிதி வசூலைக் கெடுப்பதற்காகச் செய்யும் முயற்சிகளே என்று தலைவர் கருதுவதால் தயவுசெய்து தோழர் அக்காரியத்தில் இனி இறங்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆ திராவிடமணி,
செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம், சென்னை.

## தொழில் மெம்பருக்குக் கருப்புக்கொடி

இந்திய இடைக்கால சர்க்கார் தொழில் மெம்பர் தோழர் ஜகஜீவன்ராம் அவர்கள் தன் குடும்பத்துடன் டில்லியிலிருந்து புறப்பட்டு நேற்று (27-12-46) காலை சென்னை வந்தார்.

தோழர் ஜகஜீவன்ராம் சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையம் வந்தவுடன் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தோழர்கள் ஜகஜீவன்ராம் தென்னாட்டிற்கு வருவதைக் கண்டிக்கும்முகத்தான் ஒழுங்கான முறையில் கருப்புக்கொடிகள் பிடித்தனர். பிறகு "எங்கள் தலைவர் டாக்டர் அம்பேத்கார்" "ஜகஜீவன்ராம் எங்கள் தலைவரல்ல" "ஜகஜீவன்ராம் திரும்பி போ" என்ற கோஷங்களைக் கிளப்பினர். இதே மாதிரியாக தோழர் ஜகஜீவன்ராம் செல்லுமிடங்களிலெல்லாம் கருப்புக்கொடி பிடிக்கப்படும் என்று தெரியவருகிறது.

## அண்ணாமலை நகரில்

1-12-46ல் அண்ணாமலை நகர் திராவிட மாணவர் கழகத்தின் செயற்குழு கூட்டம், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவர் தோழர் கே. எ. மதியழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், ஏழை திராவிட மாணவர் ஆரம்பக்கல்விக்கான வசதிக்குவேண்டிய யோசனைகள் தோழர் இமயவரம்பனால் (செயலாளர்) கூறப்பட்டு அதற்கானவைகள் ஆலோசிக்கப்பட்டன.

## வேண்டுகோள்

கும்பகோணத்தை யடுத்த சாக்கோட்டையில் திராவிட ஏழை மாணவர் கல்வி உதவி நிதியின் உதவியால் இரண்டு ஆண்டுகளாக நடைபெறும் பாடசாலைக்குப் "பகுத்தறிவு ஆரம்பப் பாடசாலை" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இத்தொண்டிற்கு பொருள் உதவி செய்வோர்கள் எஸ். ஆர். சாமி, காரியதரிசி, திராவிட ஏழை மாணவர்க் கல்வி உதவி நிதி, சாக்கோட்டை, கும்பகோணம் என்ற முகவரிக்கு அனுப்பக்கோருகிறேன்.

எஸ். ஆர். சாமி.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

1-11-46ல் அரவக்குறிச்சி பெருமாபாளையத்தில் டாக்டர் க. பிச்சமுத்து அவர்கள் தலைமையில் ப. முத்துக்கும், தோழியர் கமலத்திற்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாகக் குடியரசுக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது,

o o

1-11-46ல் சேலம் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் செ. கொண்டய்யா அவர்களின் திருமகள் தோழியர் சுசீலாவிற்கும் சேலம் கிச்சிப்பாளையம் தோழர் ரங்கசாமி அவர்களின் திருமகன் தோழர் நாராயணசாமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாக விடுதலைக்கு 3ரூபாயும், குடியரசு, திராவிடநாடு பத்திரிகைகளுக்கு முறையே இரண்டு ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

6-11-46ல் அருப்புக்கோட்டையில் ராமசாமிபுரம் தோழர் மு. கந்தசாமி அவர்கள் மகன் தோழர் சேதுவுக்கும், கடப்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்கள் மகள் தோழியர் சரஸ்வதியம்மாளுக்கும் தோழர் சு.வீ.க. முத்துசாமி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது,

o o

8-11-46ல் இராமநாதபுரம் வட்டத்தைச் சார்ந்த திருப்பத்தூரில் தோழர் வயித்தியலிங்கம் அவர்கள் மகன் தோழர் மாணிக்கத்திற்கும், தோழர் சண்முகம் அவர்கள் மகள் தோழியர் மனோரஞ்சிதம் அம்மாளுக்கும் தென்மாப்பட்டு முன்னாள் சேர்மன் ஆ. மு. மருதப்பா அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. ரா. சிவசுப்பிரமணியம், சித. ரங்கசாமி, சி. முருகையா ஆகிய தோழர்கள் திருமணங்குறித்து சொற்பொழிவாற்றினர். திருமணத்தின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு 5 ரூபா நன்கொடையளிக்கப்பட்டது.

o o

7-11-46ல் திருவத்திபுரத்தில் திராவிடர் கழகத் தோழர் டி. தட்சணாமூர்த்திக்கும் தோழியர் கமலாவுக்கும் சென்னை தோழர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாக விடுதலை, குடியரசு, சு. ம. இ. இ கழகம் ஆகியவற்றிற்கு முறையே ரூபாய் 2, 1, 1, நன்கொடை வழங்கப்பட்டது.

o o

11-11-46ல் இராசிபுரம் தோழர் சே. அப்பாதுரை அவர்களின் பேத்தி தோழியர் இலக்குமிக்கும், தோழர் இராமசாமிக்கும் பதிவுத் திருமணம் சேலம் ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் பேளுக்குறிச்சி மிட்டாதார் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் சேலம் தோழர் எ. சித்தையன் அவர்கள் பதிவுத் திருமணங்குறித்துச் சொற்பொழிவாற்றினார். இதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு 2 ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

11-11-46ல் தாளவம்பட்டி சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் ரிட்டயர்டு ஹெட் கான்ஸ்டேபிள் தோழர் வெங்கட்டராமய்யர் அவர்கள் மகள் தோழியர் லோகம்பாள் அம்மாளுக்கும், கான்ஸ்டேபிள் நடேசபிள்ளைக்கும் பதிவுத்திருமணம் பொறையார் திராவிட கழகத்தாரால் செய்து வைக்கப்பட்டது.

o o

14-11-46ல் குத்தாலம் திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் மு. ரத்தினசாமி அவர்கள் தலைமையில் தோழர் ஆர். ஷண்முகத்திற்கும் தோழியர் ஜண்பகவல்லிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாகக் குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

21-11-46ல் மன்னார்குடி தாலுக்கா வடவேற்குடி தோழர் சதாசிவம் அவர்கள் மகள் தோழியர் இலாசெயத்திற்கும், தஞ்சை கிருஷ்ணசாமி அவர்கள் மகன் தோழர் செளவிந்தராசுக்கும் பூதலங்கலம் ப. மலையபெருமாள் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதின் நினைவாகக் குடியரசு, திராவிடநாடு, விடுதலை ஆகியவற்றிற்கு ஒவ்வோர் ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

வடசேரி சின்னராசியக்கன் தெருவில் 18-11-46ல் சாலியர் வகுப்பைச் சார்ந்த தோழியர் பொன்னம்மாளுக்கும் கோட்டார் பட்டாரியர் வகுப்பைச் சார்ந்த தோழர் கணபதிக்கும் பதிவுத்திருமணம் நடந்தது. தோழியர் பொன்னம்மாள் தனது 11வது வயதில் தன் கணவரை யிழந்தவர். பின்னர் 13 ஆண்டுகள் கழித்து இப்போழ்து மறுமணம் செய்துகொண்டனர். மறுமணங்குறித்தும் கலப்பு மணம் குறித்தும், சீர்திருத்த மணங் குறித்தும் டாக்டர் எஸ். பூதலிங்கம், ம. பகவதி, எல். எஸ். வேலாயுதம், அ. காசிலிங்கம் ஆகியோர் சொற்சொற்பொழிவாற்றினார்கள். பலர் பரிசுகளும் வாழ்த்துரைகளும் வழங்கினார்கள்.

o o

1-12-46ல் கோவை புளியகுளம் திராவிடர் கழகத்தில் தோழியர் கண்ணம்மாளுக்கும், தோழர் மருதாசலத்திற்கும் தோழர் எஸ். கே. சாமி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. புலவர்கள் நன்னன், ஆறுமுகம், சிவப்பிரகாசம், தோழர் பாலசுந்தரம் ஆகியோர் திருமணங்குறித்துப் பேசினர். அதன் நினைவாகக் கோவை திராவிடர் கழக வளர்ச்சிக்கு 2 ரூபாயும், விடுதலை, குடியரசு வளர்ச்சிக்கு ஒவ்வோர் ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

## பெயரிடல்

மணக்கால் திராவிடர் கழகத் தலைவர் தோழர் ம. இ. கந்தசாமி அவர்களின் பெண் குழந்தைக்கு 27-10-46ல் பெரியார் அவர்களால் அறிவுக்கொடி என்று பெயர் சூட்டியதின் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## மறைவு

போரூரணி திராவிடர் கழக உறுப்பினரும் தீவிர சீர்திருத்தக்காரருமான தோழர் வே. நடேசன் 9-11-46ல் தமது 32வது வயதில் இயற்கை எய்தினார். அவரின் இறுதிச்சடங்கின் நினைவாக அன்னாரின் சகோதரர் குடியரசு வளர்ச்சிக்கு 2 ரூபாய் நன்கொடையளித்துள்ளார்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

றும்தான் தோன்றும். ஆனால் உயிர் என்றும் ஆத்மா என்றும் இப்படிக் கருதச் செய்தது எது என்று பார்ப்போமானால் மதம் என்றுதான் சொல்ல வேண்டும், அதோடுகூடவே கடவுள் உணர்ச்சித் தன்மையும் என்றும்தான் சொல்ல வேண்டும். அதாவது கடவுள் என்பதும் ஒரு தன்மையே ஒழிய வஸ்து அல்ல என்று தோன்றும்.

மனிதனுடைய ஆத்மா உயிர் என்பவற்றின் தன்மைகள்தான் விசேஷமாகப் பேசப்படுகின்றனவே தவிர மற்ற ஜீவன்களுடைய ஆத்மா உயிர் பற்றிப் பேசப்படுவதில்லை. மதத்திலும் கூட ஞானிகள், வேதாந்திகள் என்பவர்களுக்குக் கடவுள், ஆத்மா. உயிர் என்பவைகள் ஒன்றுமே சத்து அல்ல என்றும் மித்தை (பொய்) என்றும் ஒரு உணர்ச்சிதான் என்றும் தோன்றும். அப்படித்தான் அவர்களும் சொல்லுகிறார்கள். அதனால்தான் தத்துவ நிலையை வேதாந்த நிலை என்றும், ஞான நிலை என்றும், மதவாதிகள் சொல்லுவதாகும். பொதுவாகவே "தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்" என்று வேதாந்திகள் சொல்லுவதுண்டு. அதன் கருத்து என்னவென்று பார்ப்போமேயானால் மனிதன் தனக்குள் தோன்றும் தன்னை என்று சொல்லுவது ஆகிய நான், என் என்கின்ற சுயஉணர்வுத் தன்மை எது என்று உணர்வானேயானால் கடவுள் தன்மை என்பது எப்படிப்பட்டது என்பது விளங்கிவிடும் என்பதாகும். உலகில் மனிதன் ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு வாழுகின்றபோது மற்ற மக்களுக்கு நன்மை தீமை செய்பவேண்டியவனாக ஆகிவிடுகிறதினால் அவற்றின் தீமையை விலக்கி நன்மையைச் செய்யவேண்டும் என்பதைத் தூண்டுவதற்கு ஆத்மா, உயிர் கற்பனையும், அதற்குத் தண்டனை—தன்பம் ஏற்பாடுகள் கற்பனையும் இவற்றை நிர்வகிக்க ஒரு தலைவன்—கடவுள் கற்பனையும் இந்த உலகுக்கு அவசியமாகிறது. நன்மை தீமை இரண்டும் செய்யாதவனுக்குக் கடவுள் பயமோ, தயவோ தேவை இல்லை. மோட்ச நரக பயம் தேவை இல்லை.

மனிதன் இயங்கிக்கொண்டு இருக்கும்வரை நன்மையோ தீமையோ இரண்டுமோ செய்யாமல் இருக்கமுடியாது. ஜீவன் இயங்கும் தன்மை இருக்கும் வரை கருவி கரணாதிகள் தொழில் செய்தேதான் தீரும். அந்தத் தொழில் மற்ற மனித ஜீவன்களுக்கு நன்மையாகவும் தீமையாகவும் தோன்றித்தான் தீரும், இது மாத்திரமல்லாமல் அத் தொழில்களில் ஒரே தொழிலானது ஒரு ஜீவனுக்கு நன்மையாய் காணப்படுவதும் மற்றொரு ஜீவனுக்குத் தீமையாய் காணப்படுவதும்ஆக இருக்கும். ஆகவே உலக மனிதச் சமுதாயக் கூட்டுவாழ்க்கைக்குத் தனிஉடைமை வாழ்க்கைக்குப் பெரியவர்கள் என்பவர்கள் நல்ல எண்ணத்துடனும், சுயநலமிகள் என்பவர்கள் தன்னலத்துடன் இந்தத் தன்மைகளை வஸ்துகளாகக் கற்பிதம் செய்து இருக்கிறார்கள் என்று கருதி மனிதன் மற்றவர்களுக்கு பயன்படும்படி நடக்கவேண்டியது அவசியம் என்றுகூறி முடிக்கிறேன்" முடிவாக ஒன்று சொல்லுகிறேன். அதாவது இதுவரை பேசினது எனக்குத் தோன்றிய கருத்தே தவிர இதுவே உண்மை, முடிந்த முடிவு என்று நான் சொல்லவில்லை. ஆகவே உங்கள் பகுத்தறிவின் மூலம் நல்ல ஒரு முடிவுக்கு வரவேண்டியது உங்கள் கடமையாகும். இன்றைய பேச்சின் தலைப்புக் காரணமாக இவை பேச நேர்ந்தது.

வணக்கம்.

## பெரியார் ஈ. வெ. ரா. பார்க்கு

"பேரணூர் பஞ்சாயத்து போர்டின் விசேடக்கூட்டம் பிரசிடெண்ட்டு தோழர் மு. தா. சபாபதி அவர்கள் தலைமையில் போர்டு கட்டிடத்தில் நடைபெற்றது. 14-உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். நிர்வாக அதிகாரி ஜனாப் எஸ். ஏ. ரஹிம் அன்சாரி அவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். பஞ்சாயத்துபோர்டு ஏற்படுத்தியிருக்கும் பார்க்குக்குப் பெரியார் ஈ வெ ரா. பார்க்கு என்று பெயர் வைக்கவேண்டுமென்றும், அந்த பார்க்கில் ஒரு வாசகசாலை அமைத்து அதற்குப் பெரியார் ஈ. வெ. ரா. வாசகசாலை எனப் பெயரிட வேண்டுமென்றும் உறுப்பினர் தோழர் எஸ். ஜி. கண்ணைய நாயுடு அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதைத் தோழர் கோபாலசுவாமி ஆதரித்தார். தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது" என்று பேரணூர் திராவிடர் கழகத் தலைவர் தோழர் எம். சிதம்பரம் அறிவிக்கின்றார்.

## பாராட்டுகிறோம்

மணச்சநல்லூர், கப்பாளையம் தோழர் எ. எம். பரிமணம் அவர்கள் தஞ்சை, கரந்தைப் புலவர் கல்லூரியில் 5 ஆண்டுகள் கல்வி பயின்று வித்துவான் இறுதித் தேர்தலில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்று 7-11-46ல் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் 1000 ரூபாய் பரிசு பெற்றார். அதன் நினைவாகக் குடியரசு, விடுதலை, திராவிட நாடு முதலிய பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக முறையே ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளித்தார்.

தோழர் பரிமணம் திராவிடக் கழகத்தின் உறுப்பினர். இப்போழ்து சென்னிமலை செங்குந்தர் உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியாகவுள்ளார். அன்னாரைப் பாராட்டுவதோடு எமது நன்றியையும் அன்னாருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# ஜப்பானில் திராவிடன்

தோழர் எ. லாசரஸ் அவர்கள் ஜப்பானில் ராணுவத்தில் வேலைபார்த்து வருகின்றார். இவரின் சொந்த ஊர் திருச்சி, குடியரசைத் தொடர்ந்து படிப்பவர் இவர். அன்னார் நமக்குத் தீட்டியுள்ள முடங்கலில் குறிப்பிட்ட செய்திகளிற் சில வற்றைக் கூறுகின்றோம்.

தமிழ்நாட்டிலிருந்து இராணுவத்தில் சேர்ந்துள்ள பார்ப்பனர், வேளாளர், முதலியார் முதலிய உயர்ந்த சாதியினர்களில் பெரும்பாலோர் தங்கள் மானத்தை இழந்து இராணுவத்தில் தோட்டிவேலை, பூட்ஸ் செய்யும் வேலை, சுவீப்பர் வேலை முதலிய இழிதொழில்களைச் செய்து வருகின்றனர் என்றும், தாழ்த்தப்பட்ட இனத்தவர் என்று கருதப்படுகின்றவர்களுடன் சரிசமானமாக வேலை பார்த்து வருகின்றனர் என்றும், வெள்ளைக்காரர்களைத் திருப்தி செய்ய தங்கள் இழிதொழிலைப் போட்டிப்போட்டுக்கொண்டு செய்கின்றனரென்றும், தங்கள் சொந்த ஊர்களிலிருந்தபோது தங்கள் உயர்ந்த சாதியினர் என்று கர்வத்துடன் கூறி, தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்பட்ட மக்களை இழிவு படுத்திய இவர்களின் உயர்ந்த சாதித்தன்மை இராணுவத்தில் பஞ்சாய்ப் பறந்துவிட்டதென்றும், இவையாவற்றையும் தான் இந்தியாவில் ராணுவவேலை பார்த்த போது நேரில் கண்டதாகவும் கூறுகின்றார்.

மேலும் ராணுவத்தில் சேவை செய்யுங்கால் ஆசாரம் அனுஷ்டானம் முதலியவற்றை அறவே விடுத்து எவ்வகை இழிதொழிலையும் செய்யும் இவர்கள் தங்கள் சொந்த ஊரில் ஏன் தாழ்த்தப்பட்டோருடன் உறவுபூண்டு பெண் கொடுத்தல், பெண் கொள்ளல் முதலிய தொடர்புகளை வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் கேட்கின்றார்.

இறுதியாக சேலம், மதுரை, நீடாமங்கலம் முதலிய இடங்களில் காங்கரஸ் காலிகள் செய்த அட்டகாசத்தைக் கண்டிப்பதுடன், ஒப்பற்றத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களின் சேவையையும், அன்னாரைத் தலைவராகக்கொண்ட திராவிட கழகத்தின் குறிக்கோளையும், சேவைகளையும் பாராட்டி, மானமுள்ள திராவிடன் ஒவ்வொருவரும் பெரியார் அவர்களைப் பின்பற்றவேண்டுமென்றும் குறிப்பிடுகிறார்,

குடி அரசு வளர்ச்சிக்காக 5ரூபாய் நன்கொடை யளித்துள்ளார் தோழர் லாசரஸ்.

குறிப்பு:- வெளிநாடு சென்றும் திராவிடர் இனப்பற்று குன்றாமல் திராவிடன் என்ற உணர்ச்சியுடன் இருக்கும் தோழர் லாசரஸ் அவர்களை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். ஆனால் நம்நாட்டிலுள்ள, படித்துப் பட்டம்பெற்ற பல திராவிடர்கள் தங்களைத் திராவிடர் என்று சொல்லிக்கொள்ளவும் வெட்கப்படுகின்றனரே! என்னே இவர்களின் இழி—இல்லை பரிதாப நிலை!

## பிறப்பு

எழுவேலி (திருவாரூர்) தோழர் வீ. நடேசன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியாருக்கு 14-11-46ல் பெண் மகவு பிறந்தது. பொன்முடி எனப் பெயரிடப்பட்டதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## நீத்தார் நினைவுநாள்

நாசரேத் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பி. எஸ். கே ஜெயபால் அவர்களின் தந்தையார் பி.எஸ் கே. ஜெயபால் அவர்களின் தந்தையார் பி. எஸ். சனியப்பன் அவர்களுக்கு முதலாவது நீத்தார் நினைவுநாள் 4-11-46 கொண்டாடப்பட்டதின் நினைவாகக் குடியரசு, திராவிட நாடு விடுதலை ஆகியவற்றிற்கு ஒவ்வோர் ரூபாய் அளிக்கப்பட்டது.

## திருப்பூரில் பெரியார்

22-12-46 பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திருப்பூர் வந்தார். அங்கு அன்று மாலை ரேடியோ மைதானத்தில் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மாலை 6மணிக்கு பொதுக்கூட்டம் துவக்கப்பட்டது. கூட்டத்திற்கு சுமார் 5000 பேர்கள் ஜில்லாவின் பல பாகங்களில் அதாவது கோவை, சூலூர் இருகூர் முதலிய இடங்களிலிருந்தும் இயக்கத் தோழர்கள் 300பேர்களுக்குமேலும் வந்திருந்தார்கள். புலவர் ஆறுமுகம், ஈரோடு சுட்டையன், பெரியார் ஆகியவர்கள் பேசினார்கள்.

கூட்டம் மிக வெற்றிகாமாக நடந்தது. மறுநாள் காலை பெரியார் ஈரோடு சென்றுவிட்டார்,

வந்திருந்த தோழர்கள் பலருக்கு திருப்பத்தூர் ஜவுளி வியாபாரம் தோழர் அருணாசலம் செட்டியார் விருந்தளித்தார்.

## மதுரையில் புரோகிதன் ஓட்டம்

மதுரை முனிசிபல் கவுன்சிலர் தோழர் சண்முகம் அவர்களின் மகள் தோழியர் முத்துலட்சுமிக்கும் தோழர் கே. பி. பாக்கியநாதனுக்கும் 1-11-46ல் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமகனுக்குத் தெரியாமல் புரோகிதன் வந்து திருமணம் செய்துவைக்க புரோகிதன் ஆயத்தம் செய்தான். இது விஷயம் மணமகனுக்குத்தெரிய வந்தது. "புரோகிதன் மணப்பந்தலைவிட்டு ஒழிந்தால்தான், நான் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொள்வேன்" என மணமகன் கூறிவிட்டார். பிறகு புரோகிதன் ஓட்டம் பிடித்தான். சுயமரியாதை முறைப்படி வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தேறியது. இது செய்தி நகரில் பரபரப்பை யுண்டுபண்ணியுள்ளது.

Edited, Printed, and Published by N.Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.